**தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமை கணக்காய்வு அறிக்கை 2020 ஜூலை 09 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் தயாரதிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பிடப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,980,598 ஆன தொகை, பணம் மற்றும் பணத்திற்கு சமமானவற்றின் கீழ் குறிப்பிடப்படாததன் காரணமாக நிதி நிலைமை கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தேறிய சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 03 திகதிய இலக்கம் 271/2019 கொண்ட சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்ததில் இவ்வாறான தவறுகளை தவிர்க்க நடவடிக்கை எடுப்பதாக. |

**1.6.2 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உருதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுருதிமிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உருதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் பயனுருதி தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமை பயனுருதிமிக்கதாக நடைமுறைப்படுத்திச் செல்ல தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதும், அதன் மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்க வேண்டிய போதும், அத்தகைய மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களின் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பவில்லை என. |

**1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.

| கணக்காய்வு அவதானம் | | பரிந்துரை | கணக்கீடு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை<br>2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கை | | | |
| (i) 3.1 பந்தி | பிரதேச செயலகத்தில் 02 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பாவனை பரீட்சிக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எரிபொருள் பாவனை பரீசோதனையிற்குட்படுத்தி இருப்பதாக மற்றும் பரீட்சிக்கப்படாத வாகனங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| (ii) 3.3 பந்தி | மாவட்ட செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களின் 32 வாகனங்கள் தொடர்பில் மீளாய்வாண்டில் ஒவ்வொறு மாதத்திலும் கடமை மேற்கொண்ட போக்குவரத்து சேவைக் குறிப்பு வெவ்வேறாக பேணப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. |
| (ஆ) பொது நிதி சுற்றறிக்கை<br>--------------------------------- | | | |
| 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட சுற்றறிக்கையின் 3.2 (iv) பந்தி | கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் யோகமவத்த 45 வீட்டுப் பாதையை கொன்கிரீட் இடுவதற்கு முதியோர் சங்கமொன்றுடன் ரூபா 485,000 ஆன ஒப்பந்தம் கைச்சாத்திட்டிருந்ததுடன் அச்சங்கத்தினால் உப ஒப்பந்தம் வழங்கி கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருந்தது. | 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட சுற்றறிக்கையின் 3.2 (iv) பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தெஹிஓவிட பிரதேச செயலாளர் ஜயவினா விடயங்களை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் குறித்த சங்கத்தை கருப்புப் பட்டியலிற்கு உட்படுத்தியதாக. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 கட்டுநிதி முகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு சனவரி முதல் திசெம்பர் வரை மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்ட கட்டுநிதி அளவைவிட ரூபா 45,957 முதல் ரூபா 946,676 வரையான வித்தியாசமான வீச்சளவில் குறைவாக கட்டுநிதி கிடைத்திருந்தது. | திறைசேரியுடனான கிட்டிய தொடர்புகளுடன் கட்டுநிதி முகாமையை சிரப்பாக செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) கட்டுநிதி மதிப்பீடு தயாரிக்கும் போது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து கிடைக்க வேண்டியுள்ள | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகளிற்கான ஒதுக்கீட்டினை வருட | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கட்டுநிதி திட்டமிடும் போது ஏனைய அமைச்சுக்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| ஒதுக்கீட்டினை கவனத்தில் கொள்ளாததனால் திட்டமிட்ட மற்றும் கோரிய கட்டுநிதிக்கிடையில் ரூபா 166,875 முதல் ரூபா 1,088,075 வீச்சளவிலான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஆரம்பத்தில் பெற்று கட்டுநிதி மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | திணைக்களங்களிலிருந்து கிடைக்கும் மீண்டுவரும் செலவின அளவு மாத்திரம் திட்டத்தில் உட்படுத்தியுள்ளதாக. |
| (இ) 2019 ஆண்டு ஏனைய செலவினத் தலைப்பு ஒதுக்கீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக முற்பணம் கிடைக்காமையினால் 2019 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 1,003,558,854 ஆன தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன், 2020 மே 28 திகதி வரை ரூபா 347,519,884 ஆன மீதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு முற்பணம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திலிருந்து கிடைக்கும் முற்பணத்திற்கேட்ப தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாக. |

## 2.2 செலவின முகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (அ) 10 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 137,900,000 ஆன ஒதுக்கீட்டில் ரூபா 58,408,338 ஆன ஒதுக்கீடு மீதியாக இருந்தது. அது வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் 12.54 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் முறையாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறை தின சம்பள கொடுப்பனவு மட்டுப்படுத்தல், செலவு மட்டப்படுத்தப்படல், திறைசேரி செயலாளரின் 2019 நவம்பர் 20 திகதி கடிதப்படி எஞ்சிய கருத்திட்டங்களை செயற்படுத்தாமை, பழுதுபார்த்தல் விண்ணப்பம் முன்வைக்கப்படாமை, ஒப்பந்த வேலைகளை தற்காலிகமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | நிருத்தியமை, நிர்வாக செலவுகளில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின கொடுப்பனவு மற்றும் விலை மணு கோராமை போன்ற காரணங்கள் குறிப்பிட்டுள்ளதாக. |
| (ஆ) | றமுக்கன, மாவனல்ல மற்றும் யடியன்தொட்ட எனும் 03 பிரதேச செயலக பிரிவுகளில் சமுதாய அடிப்படை பசுமை சமூக செயற்பாட்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக 2019 ஆகஸ்ட் 27 திகதிய இலக்கம் 391 கொண்ட குறை நிரப்பு ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 4,050,000 ஆன ஒதுக்கீடு கேகாலை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. யடியன்தொட்ட மற்றும் மாவனல்ல பிரதேச செயலக பிரிவுகளினால் வழங்கப்பட்டிருந்த முன்மொழிவுகளை திருத்தம் செய்து செயற்படுத்த தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. றமுக்கன பிரதேச செயலகத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவினை செயற்படுத்த ரூபா 1,350,000 ஆன தொகை வழங்கப்பட்டிருந்த போதும் குறித்த செயற்பாடுகளிற்கு ஈடுபடுத்தப்படாததனால் குறை நிரப்பு ஒதுக்கீடு பூரணமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறை நிரப்பு கொயின் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டினை குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதால் குறித்த நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்த காலம் போதாமை மற்றும் தேர்தலின் பின்னர் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் கட்டுநிதி கிடைக்காமை மீது நிகழ்ச்சி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என. |

**2.3 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்**

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 571 பிரகாரம் காலம் கடந்த அனைத்து வைப்புக்களையும் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், மாவட்ட செயலகத்திற்குரிய 03 வருடங்களை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 4,927,612 மற்றும் 05 வருடங்களை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 68,459,898 ஆன வைப்புக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலம் கடந்த வைப்புகள் தொடர்பாக நிதி பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பது தொடர்பாக பரிந்துரை பெற்றுக் கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மற்றும் முற்பணம் கிடைத்தவுடன் கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்பட்டுள்ள வவுசர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. |

**கணக்காய்வு அவதானிப்புகள் பரிந்துரை கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| (அ) தாபனக் விதிக்கோவையின் XXIV பிரிவின் 1.6 பிரகாரம் ஒருவர் உத்தியோகத்தர் இடமாற்றம் பெறும் போது இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர் செல்லும் திணைக்களத்திற்கு தாமதமின்றி எழுத்து மூலம் அறிவித்து அவ் உத்தியோகத்தரிடமிருந்து குறித்த கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 2 வருடங்களிற்கு கிட்டிய காலத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 93,457 ஆன ஒரு கடன் மீதியையும் மற்றும் 12 மாதத்திற்கு கிட்டிய காலத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 117,569 ஆன ஒரு கடன் தொகையையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபனக் விதிக்கோவையின் XXIV பிரிவின் 1.6 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடன் தொகை தவனை அடிப்படையில் செலுத்தப்படுவதாக. |
| (ஆ) தாபனக் விதிக்கோவையின் XXIV பிரிவின் 4.5 உபபிரிவு மற்றும் 4.6 உபபிரிவு பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை பிரதான கடனாலியிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பத்தில் அத்தொகையை அவரின் பிணையாளியிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 03 மற்றும் 05 வருடத்திற்கு இடைப்பட்ட காலமாக ரூபா 116,379 ஆன கடன் மீதியொன்று அறவிடப்படாமல் நிலவியது. | தாபனக் விதிக்கோவையின் XXIV பிரிவின் 4.5 உபபிரிவு மற்றும் 4.6 உபபிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அலுவலர் ஒருவரின் பிணையாளியிடம் கடன் தவனை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், எஞ்சிய அலுவலர்கள் இருவரும் விட்டு விட்டு கடன் மீதியை பகுதி பகுதியாக செலுத்துவதாக. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகளை மேற்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மனிதவள மற்றும் தொழில் வாய்ப்புகள் பிரிவின் 09 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும், அவற்றில் 05 மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இவ் 05 செயற்பாடுகளினுள் 207 வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும், அவற்றில் 184 இனை மாத்திரம் நடைமுறைப்படுத்தியமையால், ஆண்டினுள் 23 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தன. | திட்டமிட்டவாறு குறித்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு போதியளவு ஒதுக்கீடு வழங்கப்படாமை மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலை திட்டங்கள் வருடாந்த முன்னேற்ற திட்டத்தில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளதாக. |
| (ஆ) | சமூக சேவைப் பிரிவு – முதியோர், பௌத்தமத பிரிவு, இடர் முகாமை பிரிவு மற்றும் சிறு வியாபார பிரிவுகளின் செயலாற்றுகை, செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய தயாரிக்கப்படாமையினால் திருப்திகரமான கணக்காய்வு பரிசோதனை ஒன்றை செய்ய முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய முன்னேற்றத்தை குறிப்பிட வேண்டும். | செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய திட்டமிடப்பட்ட சில வேலைத் திட்டங்கள் திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்த முடியவில்லை என. |

### 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தெஹியோவிட பிரதேச செயலகத்தினால் 2019 ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசித்திருந்த கருத்திட்டங்களின் 2019 திசெம்பர் 31 திகதி முன்னேற்றம் பற்றிய பரிசோதனையின் போது அடிப்படை வசதிகள் மேன்படுத்தும் விஷேட வேலைத்திட்டம், கிராம எழுச்சி வேலைத்திட்டம், கிராம எழுச்சி வீட்டு | இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடியவாறு திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அவ் இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கைகளை | மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களிற்கு முற்பணம் கிடைக்காததால் ஏற்படும் தாமதம காரணமாக ஒப்பந்த சங்கங்கள் அவர்களின் அங்கத்துவ நிதியத்தை |

| | | | |
|---|---|---|---|
| | வேலைத்திட்டம் மற்றும் வரிசை அமைச்சு கருத்திட்டம் போன்ற 04 வேலைத்திட்டங்களின் கீழ் ரூபா 223,437,680 பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட 476 கருத்திட்டங்களில், ரூபா 68,939,183 பெறுமதியான 91 கருத்திட்டங்கள் அதாவது 31 சதவீதம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | ஈடுபடுத்த பின்வாங்கும் காரணத்தால் கருத்திட்டங்களை பொருப்பேற்பதில் தாமத நிலை அவதானிக்கப்படுபதாக. |
| (ஆ) | வரகாபொல பிரதேச செயலகத்தினால் 2019 ஆண்டிற்காக நடைமுறைப்படுத்த உத்தேசித்திருந்த கருத்திட்டங்களில் 2019 திசெம்பர் 31 திகதியன்று முன்னேற்றம் தொடர்பான பரிசோதனையின் போது கிராம எழுச்சி மற்றும் கிராம எழுச்சி துரித கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 297,000,000 பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட 814 கருத்திட்டங்களில், ரூபா 38,175,000 பெறுமதியான 107 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. செயற்படுத்தப்படாத கருத்திட்டங்களினுள் மதிப்பீடு தயாரிக்கப்படாத 40 கருத்திட்டங்களும், மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படாத 46 கருத்திட்டங்கள் மற்றும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட 21 கருத்திட்டங்களும் ஆனது. | திட்டமிட்ட பிரகாரம் தாமதமின்றி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.11.20 திகதிய திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்ட BD/GPS/155/09/01/HA/ 2019 கொண்ட கடிதம் பிரகாரம் அப்போது உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத கருத்திட்டங்கள் மற்றும் வேலை ஆரம்பிக்கப்படாத கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலை இரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக |

**3.3 எதிர்பார்த்த நலன்களை (outcome) அடைந்து கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| தெரனியகள பிரதேச செயலாளர் பிரிவின் ஜென்பட் தோட்ட நீர் உத்தேச திட்டத்திற்காக கிராம எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் ரூபா 958,497 செலவில் நீர் ஏந்து பிரதேச அபிவிருத்திக்காக தாங்கி வரை நீர் குழாய் புதைக்கப்பட்டிருந்தது. இதற்காக சில ஆண்டுகளிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த தாங்கி ஒன்றை பயன்படுத்தியதால் நீர் மூலங்களில் இருந்து தாங்கியை நோக்கி ஓடும் நீர் தாங்கியினுள் தேங்காது அதிகளவில் வெளியில் கசிவதால் மற்றும் நீரை பெற்றுக் கொள்ள உரிய திட்டமொன்று இல்லாததனால் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நோக்கம் அடையப் பெறவில்லை. | அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டின் நோக்கம் அடையப் பெறும் வகையில் திட்டத்தை தயாரித்து செய்றபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் தாங்கி பழுதுபார்த்தலிற்காக மதிப்பீட்டில் பணம் ஒதுக்கப்படவில்லை எனவும் இந் நீர் உத்தேச திட்டத்தின் கீழ் வினியோகிக்கும் நீர் பிரதேசவாசிகளால் பயன்படுத்துவதாக பிரதேச சபை தவிசாளரினால் அறிவித்துள்ளதாக. |

## 3.4 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கேகாலை மாவட்டத்தினுள், மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலாளர் பிரிவிகளினூடாக தேசிய நிதியம் மூலம் செயற்படுத்த திட்டமிடப்பட்ட ரூபா 49,678,521 பெறுமதியான 11 வேலைத்திட்டங்களின் கீழ் செயற்படுத்தவிருந்த 89 கருத்திட்டங்கள் உடன்படிக்கைக்குட்பட்டிருந்த போதும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படாமை, உடன்படிக்கை கைச்சாத்திடாமை, பயன்பாட்டாளர்களினால் பூர்திசெய்ய வேண்டிய ஆலோசனை மற்றும் ஏற்பாடுகள் நிறைவேற்றப்படாமை, பிரதேச சபையினால் கருத்திட்டம் மேற்கொள்ளப்படாமை, மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி கருத்திட்டத்தை மேற்கொள்ள முடியாமை, மதிப்பீடு தயாரிக்கப்படாமை, ஒதுக்கீடு போதாமை, சேயற்படுத்த போதிய கால அவகாசம் இல்லாமை மற்றும் பயன்பாட்டாளர்கள் முன் வராமை மற்றும் காலாவதி போன்ற காரணங்களினால் நிறைவேற்ற முடியாதிருந்தது. | உரிய கால எல்லையினுள் கருத்திட்டங்களை நிறைவேற்றக் கூடிய வாறு திட்டத்தை முறையாக தயாரித்து கால எல்லையினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.5 நிதி விடிவிக்கப்பட்ட போதும் முன்னேற்றத்தை அடைந்திருக்காத கருத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
| --- | --- | --- |
| 03 பிரதேச செயலகங்களினால் 08 நீர் கருத்திட்டங்களை நிறைவேற்ற தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிற்குரிய ரூபா 5,605,087 ஆன மொத்த தொகையையும் 2018 ஏப்ரல் 20 திகதி முதல் 2019 நவம்பர் 14 திகதி வரையான காலத்தினுள் விடிவித்துள்ள போதும், கேள்வி மனு ஒப்படைக்கப்படாமை, மனு கோரல் தாமதம் மற்றும் கால்வாய்கள் வெட்டப்படாதிருந்மை போன்ற காரணங்களால் அக் கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் 2020 மே 30 திகதியன்றும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பணம் விடுவிக்கப்பட்ட பின்னர் அதன் முன்னேற்றம் தொடர்பாக பின்னூட்டல் செய்து கருத்திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையுடன் கலந்துரையாடி தாமதமின்றி கருத்திட்டங்களின் குறைபாடுகளை தயாரித்து அறிக்கையிடுமாறு பிரதேச செயலாளர்களிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக. |

### 3.6 சொத்துக்கள் முகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புலத்கொஹுபிடிய பிரதேச செயலகப் பிரிவினுள் 2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புலத்கொஹுபிடிய வாராந்த சந்தைக்காக ரூபா 9,387,887 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019 ஜுன் 16 திகதி புலத்கொஹுபிடிய பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனாலும் திட்டமிட்ட படி மலசலகூடத் தொகுதி மற்றும் மரக்கறி கலுவும் திறந்த பகுதி செய்யப்படாமை காரணமாக 2020 மே 30 திகதியன்றும் விளைவற்று நிலவியது. | அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான நிர்மாணங்களை முறையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டமிட்ட படி நிர்மாணம் மேற்கொள்ளப்படு கின்றனவா என விளிப்புடன் இருக்க வேண்டியமை. | புலத்கொஹுபிடிய வாராந்த சந்தை 2019 ஜுன் 16 திகதி புலத்கொஹுபிடிய பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் இவ் உடன்படிக்கை சபரகமுவ மாகாண சபைக்கு முன்வைப்பது பொருத்தமானதாக. |
| (ஆ) | புலத்கொஹுபிடிய பிரதேச செயலகப் பிரிவினுள் 2014 தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ரூபா 7,673,289 ஆன ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டு நிர்மானிக்கப்பட்ட கென்தவ மாதர் கிளினிக் மத்திய நிலையம் 2017 ஒக்டோபர் 11 திகதியன்று வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் அத்தியவசிய சாதனமொன்றாக காணப்படும் நீர் மூலங்கள் இல்லாததால் 2020 மே 30 திகதியன்றும் அதனை திறக்க முடியாதிருப்பதால் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்று நிலவியது. | அபிவிருத்தி கருத்திட்டங்களை நிர்மாணிக்க முன்னர் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை செய்ய வேண்டியமை மற்றும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கென்தவ மாதர் கிளினிக் மத்திய நிலையம் 2017 ஒக்டோபர் 11 திகதியன்று வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதால் சபரகமுவ மாகாண சுகாதார சேவை பணிப்பாளரிற்கு இவ் ஐயவினாவை முன்வைப்பது பொருத்தமானதாக. |
| (இ) | அரநாயக பிரதேச செயலகப் பிரிவினுள் தேசத்திற்கு மகுடம் தேசிய வேலைத்திட்டத்திற்கு சமமாக கூட்டுத் தொகை ரூபா 17,579,192 ஆன ஒப்பந்த தொகைக்கு நிரமாணிக்கப்பட்ட களுகள மாதர் கிளினிக் மற்றும் கல்பொக்க மாதர் கிளினிக் ஆகிய 2 மத்திய நிலையங்களின் வேலைகளை பூர்த்தி செய்து 2019 பெபரவரி 12 திகதி உரிய பராமரிப்பு நிருவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அம் மகளிர் கிளினிக் அமைந்துள்ள இடத்தில் நீர் மூலங்கள் இல்லாததால் 2020 மே மாதமளவிலும் அக்கட்டிடங்கள் | நீர் மூலங்கள் சம்பந்தமாக சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டதன் பின்னர் நிர்மாண பணிகளை மேற்கொள்ள வேண்டியமை, கர்ப்பினி தாய்மார்களுக்கு வளவிற்கு பிரவேசிக்க வசதியான | களுகள மாதர் கிளினிக் மத்திய நிலையம் 2019 பெப்ரவரி 12 திகதியும், கல்பொக்க மாதர் கிளினிக் மத்திய நிலையம் பெப்ரவரி 07 திகதி முறையாக மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளரிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவற்றின் பராமரிப்பு தொடர்பான பொருப்பு |

| | | |
|---|---|---|
| ஒப்படைக்கப்பட்ட நோக்கத்திற்கு ஈடுபடுத்தப்படாமல் விளைவற்று நிலவின. | இடத்தை தெரிவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | மாகாண சுகாதார சேவை பணிப்பாளரிற்கு உரியதாக. |

**3.7 அரச அலுவலர்கள் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய மாவட்ட செயலகம் மற்றும் 08 பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 28 அலுவலர்கள் குறித்த பிணை வைப்பை வைப்புச் செய்திருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 881 (ii) இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய தனது கீழுள்ள அலுவலர்களிடமிருந்து குறித்த கால எல்லைக்குள் அவ்வாறு செயற்படுவதாக குறித்த தலைவர்களினால் பொருப்பேற்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 (ii) பிரகாரம் பிணை வைத்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். | அனைத்து அலுவலர்களிடமும் பிணை பணம் பெற்றுக்கொள்ளல் தற்போது செயற்படுவதுடன் முடிவடைந்தவுடன் கணக்காய்வை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.8 நட்டம் மற்றும் இழப்பு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வரகாபொல பிரதேச செயலகத்திற்கு சொந்தமான PD – 2964 கொண்ட வாகனம் 2018 மே 28 திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 104 (2) பிரகாரம் ஆரம்ப விசாரணை அறிக்கை 01 வருடமும் மற்றும் நிதிப் பிரமாணம் 104 (4) பிரகாரம் பூரண அறிக்கை 01 வருடம் 05 மாதங்கள் தாமதித்து சமர்பிக்கப்பட்டிருந்தது. காப்புருதி நிருவனத்தினால் மீள் நிரப்பாத ரூபா 44,400 தொகையை பழுதுபார்த்த நிருவனம் நிராகரித்திருந்ததால் அது தொடர்பாக நிதிப்பிரமானணம் 109 பிரகாரம் ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் பதிவேடுகளை சரியாக நாளாதுவரையாக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரும்புத் தொழிற்சாலையினரின் ஜீவன நிலையை மேன்படுத்த நோக்கில் ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டும் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 1,005,930 பெறுமதியான இரும்பு தளர்த்தும் இயந்திரம் ஒன்று மற்றும் அதற்குரிய உபகரணங்கள் அரநாயக பிரதேச செயலகத்திற்கு சொந்தமான எபலாவத்த பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், உரிய முறைப்படி ஒப்படைக்காத கட்டிடமொன்றினுள் அவ் இயந்திரத்தை நிருவியதன் காரணமாக ரூபா 92,500 பெறுமதியான பண்டங்கள் காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் பொருப்புவாய்ந்த அலுவலர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஏனைய அமைச்சொன்றினால் கிடைத்த ஒதுக்கீட்டை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் நிருவப்பட்ட உபகரணங்கள் காணாமல் போனதால் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டில் குறிப்பிடவில்லை என. |

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கலிகமுவ அரன்தர பிரதேசத்தில் வியாபார அறையுடன் கூடிய உத்தியானம் ஒன்றை நிர்மணிக்க (கிராம சக்தி விளிப்பு நகரம் - 2018) ஜனாதிபதி அலுவலகத்தினால் ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. முதலாம் கட்டத்தின் கீழ் தொரகஹபிடிய உட்பிரவேச பாதையின் கால்வாய் தொகுதி பாதை கொன்கீட் இடல் மற்றும் பக்க மதில் நிர்மாணத்திற்காக ரூபா 1,911,146 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் நிர்மாணிக்கப்பட்ட பக்க மதில் உடைந்து விழுந்திருந்தது. மேலும் உத்தேச காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இக் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் நிருத்தப்பட்டிருந்ததால் இது வரை செலவிடப்பட்ட ரூபா 2,068,689 ஆன தொகை விளைவற்ற செலவாகியிருந்தது. | கருத்திட்டமொன்றை தெரிவு செய்யும் போது மற்றும் செயற்படுத்தும் போது அது தொடர்பாக சரியான ஆய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் வினைதிறனாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | விடயங்கள் ஏற்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதியை திருத்தியமைக்குமாறு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளதாக மற்றும் நிர்மாணிக்கப்பட்ட பாதையை இர கிராம அலுவலர் பிரிவின் கிராமவாசிகள் பயன்படுத்துவதாக. |
| (ஆ) | மீளாய்வண்டில் புலத்கொஹுபிடிய பிரதேச செயலாளர் பிரிவில் உந்துகொட லேள்ளவள மதகொன்றை நிர்மாணிக்க கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் ரூபா 1,985,000 ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் மதகிற்கு பதிலாக பாலமொன்றை நிர்மாணிக்க நடுவில் | அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒதுக்கீடு நிர்மாண பணிகளிற்காக வினைத்திறனுடன் மற்றும் | கணக்காய்வு ஐயவினாவிற்கு பதில் அளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| கொன்கிரீட் தட்டொன்று இல்லாத இரண்டு பக்க மதில்களை நிர்மாணிக்க ரூபா 1,945,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக செலவிடப்பட்ட தொகை சிக்கனமற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு தயாரிக்கையில் 03 உருப்படிகளிற்காக பயன்படுத்தப்பட்ட வீதங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வீதங்களிற்கிடையில் ரூபா 33,736 வேறுபாடு நிலவியது. | பயனுருதிமிக்கதாக பயன்படுத்தப்பட வேண்டும். | |

**3.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கொள்கைகள், பொருளாதார நடவடிக்கைகள், மீள் குடியேற்றல் மற்றும் புனர்நிர்மாணம் வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் செயற்பாட்டு அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு கிதுள்கல நகர அபிவிருத்தி கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2019 ஆண்டில் ரூபா 35,615,876 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அதன் கீழ் 0.8 கிலோ மீட்டர் நீளமுள்ள கிதுள்கல நகர மத்தியிலான பாதையின் இரு பக்கங்களையும் விரிவாக்கி பக்க கால்வாய் நிர்மாணிக்க ரூபா 25,698,900 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இவ்வேலையை செயற்படுத்துகையில் ஓர் வெளிதரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தின் மீது 2019 நவம்பர் 29 திகதி முதல் நிர்மாண நடவடிக்கைகள் இடை நடுவே நிருத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி கருத்திடம் வினைத்திறனுடன் மற்றும் பயனுருதிமிக்கதாக செயற்படுத்த வேண்டியமை மற்றும் பிரச்சினையான சந்தர்ப்பத்தில் அதனை தீர்க்க வழியமைக்க வேண்டும். | ஏற்கப்பட்டுள்ளது. இந்நிரமாண கருத்திட்ட நடவடிக்கைகளை இடை நடுவே நிருத்தியதாக தேசிய கொள்கைகள்எமற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சை அறிவூட்டியுள்ளதாக. |
| (ஆ) | மோடார் சைக்கில் பெற்றுக் கொண்ட கள அலுவளர் ஒருவர் மோடார் சைக்கில் உரித்தற்ற பதவியொன்றிற்கு இடமாற்றம் பெறல், சேவை விலகல் மற்றும் சேவை இடைநிருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் மோடார் சைக்கிலின் சந்தைப் பெறுமதியை செலுத்த வேண்டும். எனினும் கேகாலை மாவட்ட செயலகத்தினூடாக மோடார் சைக்கில் வழங்கப்பட்ட 2 | தொடர்புடைய நிருவனத்திற்கு அறிவித்து குறித்த அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014/2015 பாதீட்டு முன்மொழிவு திட்டத்தின் கீழ் கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட மோடார் சைக்கிலை பெற்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச செயலகங்களில் 11 அலுவலர்கள் ஆசிரியர் சேவைக்கு 2015 மார்ச் முதல் 2016 பெப்ரவரி வரையான காலத்தினுள் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த போதும், அவற்றின் சந்தைப் பெறுமதி ரூபா 1,529,920 தொகையை அறவிட முடியாதிருந்தது. | | இணைந்த சேவைகள் ஆணையாளர் நாயகம் அறிவூட்டப்பட்டுள்ளதாக |
| (இ) | சபரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான 10 பிரதேச செயலகங்களினுள் அமைந்துள்ள 117 ஏக்கர் 3 ரூட் 1.6 பர்சஸ் அளவான 74 பாடசாலை காணிகள் 1994 முதல் 2018 ஆண்டு வரையான கால வீச்சளவினுள் மூடப்பட்டிருந்தன. அவற்றில் 33 பாடசாலைகளின் வளங்கள் மாத்திரம் வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மீதி 41 பாடசாலைகளுக்கு சொந்தமான 52.5 ஏக்கர் 2 ரூட் 36 பர்சஸ் அளவை பயனுள்ள வேலைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலே மூடப்பட்ட 74 பாடசாலைகளினுள் காணப்படும் 2008 முதல் 2017 ஆண்டு வரை மூடப்பட்ட 6 பாடசாலைகளின் உடமையை பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரச சொத்துக்களை முறையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவற்றின் பாதுகாப்பு தொடர்பாக ஒழுங்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். | குறித்த காணியை பயனுள்ள நடவடிக்கைகளிற்கு பயன்படுத்துமாறும் மூடப்பட்ட 06 பாடசாலைகளின் உடமையை பிரதேச செயலாளர்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. |

## 3.11 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

மாவட்ட செயலகங்களிற்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த, பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகளிற்கான தொடர்பு பின் வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை** |
|---|---|---|---|---|
| **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** | | |
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| 2012 | 1.9(ஆ) 1 | புதிய மாவட்ட செயலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 294,982,342 ஆன தொகைக்கு நிர்மாணிக்க 2012 ஆண்டு | நிர்மாண பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் இதன் எஞ்சிய வேலைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இக் கட்டிடத்திறகாக ரூபா 72,119,833 செலவிடப்பட்டிருந்ததுடன் 2013 நவம்பர் 10 திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. நிர்மாணப்பணிகள் இடை நடுவே நிருத்தப்பட்ட இக் கட்டிட முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள் 2019 நவம்பர் 12 திகதிய அமைசரவை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 198,832,312 மதிப்பீட்டு தொகைக்கு ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், 2020 மே மாதமளவிலும் எவ்வித நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ள பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ள உடன்படிக்கை கைச்சாத்திடவுள்ளதாக மற்றும் உடன்படிக்கையின் வரைபு 2020 ஜுன் 17 திகதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. |
| 2013 | 1.10 | கேகாலை, வரகாபொல பிரதேச செயலகங்கள் மற்றும் கேகாலை மாவட்ட செயலகத்தில் ஏற்பட்டிருந்த ஓய்வூதிய மோசடியினால் ரூபா 16,765,760 தொகை இது வரை அறவிடப்படவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இது தொடர்பாக குறித்த தரப்பினரிற்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பித்திருப்பதாக |
| 2014 | 3.9(ஈ) iii | இரண்டு மாடிகளுடன் கூடிய துத்திரிபிடிய பேரூந்து தரிப்பிடம் ரூபா 23,570,905 ஆன மதிப்பீட்டிற்கு நிர்மாணிக்க 2014 பெபரவரி 19 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக் கருத்திட்டத்திற்காக ரூபா 3,988,900 செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் இடை நடுவே நிருத்தப்பட்டிருந்தது. இக் காணி அரசிற்கு சொந்தமான காணி ஒன்றாகையால் அரநாயக பிரதேச சபைக்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2013 மற்றும் 2019 ஆண்டுகளில் மாகாண காணி ஆணையாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்ட போதும் 2020 மே 30 திகதி வரை இச்செயற்பாடு நிறைவேறி இருக்கவில்லை. | காணியை பிரதேச சபைக்கு ஒப்படைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அந் நிருவனத்தினூடாக எஞ்சிய நிர்மாணங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நிதிய ஒதுக்கீட்டை பயன்படுத்தி இவ் வேலையின் பணிகளை பூர்த்தி செய்ய அரநாயக பிரதேச சபை உடன்பாட்டுள்ளது. அதன் பிரகாரம் எஞ்சிய பணிகளை மேற்கொள்ள உதவி மாகாண ஆணையாளரின் ஆலோசனையை கோரிய போதும் அது கிடைக்கவில்லை. |

## 4 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
| --- | --- | --- |
| ஜனாதிபதி செயலகத்தின் நிலைபேறான அபிவிருத்திப் பிரிவினூடாக சமூககட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் பயன்பாட்டினூடாக இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கில் 2017 ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கிராம சக்தி மக்கள் செயற்பாட்டிற்காக கேகாலை மாவட்டத்தில் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் நிருவப்பட்ட மக்கள் சங்கங்களின் 43 வங்கிக் கணக்குகளிற்காக 2019 ஆணடினுள் வழங்கப்பட்டிருந்த ரூபா 69,575,200 ஆன ஒதுக்கீட்டு பணத்திலிருந்து ரூபா 58,145,376 ஆன தொகை அதாவது மொத்த தொகையில் 83.6 சதவீதத்தை இலக்கு நோக்கிய செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்படாது வங்கி கணக்குகளில் விளைவற்று நிலவியது. | கருத்திட்டத்தை செயற்படுத்த வழங்கப்படும் ஒதுக்கீடு வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டியமை. | முன் நடவடிக்கை தொடர்பாக கொள்கையளவிலான தீர்மானம் எடுப்பதற்காக தேவையான தகவல்களை பெற்று அது தொடர்பாக எதிர்காலத்தில் கணக்காயவை அறிவூட்டுவதாக குறித்த அமைச்சினால் அறிவித்துள்ளதாக. |

## 5 மனித வள முகாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தில் 2019 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 1959 ஆனதுடன் உள்ளவாரான ஆளணி 1856 ஆனதில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 103 ஆக இருந்தன. | அத்தியவசிய ஆளணியை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்ப குறித்த உத்தியோகத்தரிற்கு அறிவித்துள்ளதாதக. |